செய்தி வெளியீடு எண். 148 நாள்: 16.03.2018

**பத்தாம் வகுப்பு இடைநிலை அரசு பொதுத்தேர்வினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்**

திருவள்ளூர் ஸ்ரீ லட்சுமி மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் பத்தாம் வகுப்பு இடைநிலை அரசு பொதுத்தேர்வினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.032018) நேரில் பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

இடைநிலை பொதுத் தேர்வுகள் (SSLC) 16.03.2018 முதல் 20.04.2018 வரையிலும் நடைபெறவுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் தேர்வில் 24,249 ஆண்களும், 23,870 பெண்களும் ஆக மொத்தம் 48,119 தேர்வர்களும், தேர்வு எழுதவுள்ளனர். பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளியில் 14 மாணவர்களும், 7 மாணவிகளும் மற்றும் முகப்பேர், நேத்ரோதயா சிறப்பு பள்ளியை சேர்ந்த பார்வையற்ற 5 மாணவர்களும் தேர்வெழுதுகின்றனர். இத்தேர்வுகளுக்கு 159 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிறைவாசிகளின் வசதிக்காக புழல் மத்திய சிறையில் தனித்தேர்வர் மையம் ஒன்று அமைக்கப்பட்டு, இம்மையத்தில் 95 சிறைவாசிகள் தேர்வெழுதவுள்ளனர். மேலும், இடைநிலை பொதுத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 18 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திற்கும் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரும் மூத்த பட்டதாரி ஆசிரியர் ஒருவரும் நியமனம் செய்து ஆக மொத்தம் 36 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

வினாத்தாட்கள் அனைத்தும் அரசுத்தேர்வுகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு அந்தந்த வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களில் வைக்கப்பட்டு ஆயுதம் ஏந்திய காவலர்கள் மேற்பார்வையில் பாதுகாப்பாக உள்ளது. ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் தேர்வர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாத்தாள்கள் போதுமான அளவு பெறப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 159 தேர்வு மையங்களுக்கும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாகவும், மூத்த பட்டதாரி ஆசிரியர்களை துறை அலுவலர்களாகவும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களின் எண்ணிக்கை 400-க்கும் அதிகமாக உள்ள மையங்களுக்கு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் துறை அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து தேர்வு மையங்களுக்கும் 20 தேர்வர்கள் கொண்ட ஓர் அறைக்கு ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2406 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களை தடுக்கும் பொருட்டு 50 பறக்கும் உறுப்பினர்களும், 310 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் தேர்வு மையத்தினை திடீர்பார்வை மேற்கொள்வர்.

வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள்களை கொண்டு செல்ல 31 வழித்தடங்கள் அமைக்கப்பட்டு இவ்வழி தடங்களுக்கு 62 வழித்தட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இவ்வாய்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர். த.இராஜேந்திரன், திருவள்ளூர் மாவட்ட கல்வி அலுவலர் திரு.குமாரசாமி, கல்வி ஆய்வாளர் திரு.ராமமூர்த்தி திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன் மற்றும் கல்வித்துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**